**செ. கு. எண்: 143** **நாள்:13.06.2013**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 13.6.2013

சென்னை, மாநகர போக்குவரத்துக் கழகம், அண்ணாநகர் பேருந்து பணிமனையில் ஓட்டுநராகப் பணி புரிந்து வந்த கே.கே.நகர், நெசப்பாக்கம் பகுதியைச் சேர்ந்த திரு. காளிக்குட்டி என்பவரின் மகன் ராமைய்யா, திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், கோயில்பதாகை கிராமம், கனரக வாகன தொழிற்சாலை சாலை அருகே 1.6.2013 அன்று ஏற்பட்ட வாகன விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்தில் அகால மரணமடைந்த ராமைய்யாவின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சாலை விபத்தில் உயிரிழந்த ராமைய்யாவின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை.9**